**S.C.No. 17/2021**

**நாள்: 25.10.2025**

**P.W.40 – உதயகுமார்**

(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, 5ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத்குமார், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 11ம் எதிரி கலைச்செல்வன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

1 ஆம் எதிரி, 2 ஆம் எதிரி, 4 ஆம் எதிரி, 12 ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டனர். 5 முதல் 11 எதிரிகள் ஆஜர்.

**Cr.M.P.1352/2025–ல் 07.08.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2, 6, 8, 9 மற்றும் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவத்தை பற்றி நீங்கள் முதல் முதலில் எப்போது எங்கிருக்கும்போது கேள்விப்பட்டீர்கள் என்றால் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி அவர்கள் வழக்கு பதிவு செய்து 18.09.2020 ஆம் தேதி சுமார் காலை 11.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் ஒப்படைத்த போது தெரிந்துகொண்டேன். காவல்நிலையத்திற்கும் சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே சமார் 2.5 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். காவல்நிலையத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கிலோமீட்டர் இருக்கும். நீங்கள் அரசு மருத்துவமனைக்கு இந்த வழக்கு குறித்து சென்றீர்களா என்றால் மதியம் சுமார் 1.30 மணிக்கு சென்றேன். நீங்கள் மதியம் 1.30 மணிக்கு

மருத்துவமனைக்கு சென்ற போது இறந்தவரின் சடலம் இருந்ததா என்றால் இருந்தது. சடலத்தின் மீது விசாரணை நீங்கள் எத்தனை மணிக்கு மேற்கொண்டீர்கள் என்றால் அன்று மதியம் 1.45 மணிக்கு ஆரம்பித்தேன். நீங்கள் பிரேத விசாரணை செய்யும் போது இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். இந்த வழக்கில் புகார்தாரர் அ.சா.1 சஷ்மிதாவை முதல் முதலில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால் 18.09.2020 ஆம் தேதி மதியம் 1.15 மணிக்கு கரூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். நீங்கள் சஷ்மிதாவை ஒரே முறை தான் விசாரித்தீர்களா என்றால் ஒருமுறை தான் விசாரித்தேன். சஷ்மிதாவின் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தினீர்களா என்றால் இல்லை. புலன் விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பு இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்து ஆரம்பித்தீர்களா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் பெயர் தெரிந்த 2 நபர்கள் மற்றும் 2 நபர்கள் எதிரிகளாக சொல்லப்பட்டிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். பெயர் தெரிந்த நபர்களில் 2 வது நபர் அஜித்குமார் என்று சொன்னால் சரிதான். அஜித்குமார் அருவாளால் இறந்தவரை இடது கை புஜம், இடது முழங்கை, இடது மணிக்கட்டு, இடது தலை, இடது கண்ணம், தாடை மற்றும் முதுகுப்பகுதியில் வெட்டியதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் 18.09.2020 ஆம் தேதியில் மதியம் 12.30 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சொன்னால் சரிதான். அன்றைய தினமே குற்றவியல் நீதித்துறை நடுவர் வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொண்டார். இந்த வழக்கில் அஜித்குமார் நீக்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள எதிரியின் பெயரை நீக்க வேண்டும்

என்றால் சட்டப்படி என்ன செய்யவேண்டும் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எதிரியை நீக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். எதிரி நீக்கல் அறிக்கையை என்று தயார் செய்து எப்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்கள் என்றால் 19.09.2020 அன்று எதிரி நீக்கல் அறிக்கை மற்றும் எதிரி சேர்த்தல் அறிக்கை தாயார் செய்து அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **எதிரி நீக்கல் மற்றும் சேர்த்தல் அறிக்கை நீ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (ஆஜர் எதிரிகளுக்கும் மற்றும் அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞருக்கும் நீ.ம.சா.ஆ.7−ன் நகல் வழங்கப்பட்டது). 19.09.2020 ஆம் தேதி வரை நீங்கள் நடத்திய புலன் விசாரணை அடிப்படையில் நீ.ம.சா.ஆ.7 யை தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அ.சா.3 பிரவீன்−யை நீங்கள் எப்போது விசாரித்தீர்கள் என்றால் 19.09.2020 அன்று விசாரித்தேன். அ.சா.26 கார்த்திக்கை நீங்கள் எப்போது விசாரித்தீர்கள் என்றால் 19.09.2020 அன்று விசாரித்தேன். நீங்கள் சொன்னது போல் பிரவீன், கார்த்திக், கோவிந்தம்மாள், மணியம்மாள் ஆகியோரை விசாரித்ததிலிருந்தும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்ட அஜித்குமார் என்பவர் இந்த வழக்கில் சம்பந்தப்படவில்லை என்றும் அவர் பெயரை நீக்கம் செய்யப்பட்டும் முதல் விசாரணையில் சொல்வது சரியல்ல அஜித்குமாரை நீக்குவதற்கு முகாந்திரம் எதுவும் இல்லை என்றும் அஜித்குமாருடைய இனத்தை சார்ந்த அரசியல் கழகங்களின் நிர்பந்தத்தாலும் மற்றும் நாடார் சங்கத்தின் நிர்பந்ததினாலும் அவர் நீக்கப்பட்டு அஜித்குமாருக்கு பதிலாக பாண்டி (எ) துரைப்பாண்டி சேர்க்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பழங்குடியினர் நல பிரிவுகள் வரவேண்டும் என்பதற்காக பட்டியல் சாதியை சேர்ந்த அஜித்குமார் நீக்கப்பட்டு பட்டியல் இனத்தை சேராத பாண்டி (எ) துரைப்பாண்டியை இவ்வழக்கில்

நிர்பந்தத்தின் பேரில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அதேபோல் மற்ற எதிரிகளையும் SC/ST Act வருவதற்காக ஜாதி சங்கங்கங்கள் கொடுத்த அழுத்தத்தின் பேரில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரி அஜித்குமார் நீக்கப்பட்டது குறித்து புகார்தாரருக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவர் நீக்கப்பட வேண்டும் என்பது உங்களுக்கு தெரியுமா என்று சொன்னால் சரிதான். அவ்வாறு இந்த வழக்கில் புகார்தாரர் சஷ்மிதாவிற்கு அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் அனுப்பவில்லை அவரை அவ்வாறு நீதிமன்றத்தில் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நீ.ம.சா.ஆ.7 பின்னிட்டு வழக்கிற்காக தயாரித்து எந்த வித ஆதாரமும் இல்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதேபோல் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகையால் அவைகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் 18.09.2020 ஆம் தேதி மதியம் 12.00 மணி இருக்கும். பிளாட்பாரங்களில் பல இளநீர் கடைகள் உண்டு என்று சொன்னால் சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு இளநீர் கடை உள்ளது வேறு கடைகள் இல்லை. மற்றொரு இளநீர் கடையை வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சாலைக்கு அருகில் பிளாட்பார்ம் முழுவதும் பேவர் பிளாக் பதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சாலையின் தெற்குப்புறம் தான் இளநீர்கடை உள்ளது என்று சொன்னால் சரிதான். இரண்டு இளநீர்கடைக்கு எதிர்புறத்தில் (ரோட்டுக்கு வடபுறத்தில்) பிளாட்பார்ம் உள்ளதா என்றால் இல்லை. பிளாட்பார்ம்கது படிக்கட்டுக்கள் உள்ளது என்றால் சாலையிலிருந்து சற்று உயரத்தில் ஒரு கால் எட்டி வைக்கும் அளவில்

பிளாட்பார்ம் அமைக்கப்பட்டுள்ளது. அதைத்தவிர படிக்கட்டுக்கள் ஒன்றும் இல்லை. நீங்கள் பார்க்கும்போது சம்பவ இடத்தில் Chair இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருசக்கர வாகனம் இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் அருவாள்கள் இருந்ததா என்றால் இல்லை. இளநீர் விற்று பணம் வைக்கக்கூடிய பெட்டி(கல்லாபெட்டி) இருந்ததா என்றால் இல்லை. ரத்தம் படிந்த இளநீரோ, இரத்தம் படிந்த இளநீர் சீவப்பட்ட மட்டைகளோ இருந்ததா என்றால் இல்லை. இளநீர் கடை திறந்தவெளியில் தான் இருந்தது என்றால் சரிதான். இரவு நேரங்களில் இளநீர்களை முடிவைக்கும் சாதனங்களை நீங்கள் பார்த்தீர்களா என்றால் இல்லை. சேலம் ரவுண்டாவை உங்களுடைய வரைபடத்திலோ, பார்வை மகஜரிலோ காண்பித்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொன்னது போல் சொன்ன இடம் சம்பவ இடம் அல்ல, நீங்கள் அங்கிருந்து ரத்தம் பட்ட சிமெண்டினால் ஆன டைல்ஸ்யை கைப்பற்றப்படவில்லை என்றும் நீங்கள் உண்மையான இடத்தை மறைத்து விட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் பார்வை மகஜரும், வரைபடமும் சரியான முறையில் தயார் செய்யவில்லை என்றும் அவற்றை காவல்நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சில் உள்ள யாராவது ஒரு நபரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளீர்களா என்றால் இல்லை. Blue Dart நிறுவனத்தில் பணி செய்யும் யாராவது ஒரு நபரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்சொன்ன இரண்டு நிறுவனங்களிலும் சிசிடிவி கேமாராக்கள் உள்ளதா என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் அவ்விரு இடங்களிலும் சிசிடிவி எதுவும் இல்லை. நீங்கள் சிசிடிவி கேமராக்கள் இல்லை என்ற விவரத்தை பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை என்பதால் வரைபடத்திலும், பார்வை

மகஜரிலும் குறிப்பிடவில்லை. சிசிடிவி கேமராக்கள் அங்கு உள்ளது என்றும் வழக்கிற்கு விரோதமாகும் என்பதால் நீங்கள் அதை மறைத்துள்ளீர்கள என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன மாதிரி எதிரிகள் யாரையும் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் யாரையும் கைது செய்யவில்லை என்றும் அவர்கள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும் அதன்பேரில் எந்தவொரு பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்தவரது மாதிரி ரத்தம் பெறப்பட்டதா என்றால் என்னால் பெறப்படவில்லை மருத்துவர்கள் இறந்தவரின் ரத்தமாதிரிகளை சேகரித்து அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளார்கள். இந்த வழக்கில் இறந்தவரின் ரத்த மாதிரி உங்களால் பெறப்பட்டது என்றும் அது சட்டத்திற்கு புறம்பாக சாட்சியம் ஏற்படுத்திக் கொள்வதற்காக உபயோகிக்க படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனங்களின் உரிமையாளர்கள் யார் என்று அறிந்துகொள்ள வட்டார போக்குவரத்து அலுவலர்களை விசாரித்துள்ளீர்களா என்றால் இல்லை. அதற்குண்டான ஆவணங்களையும் பார்க்கவில்லை. இந்த வழக்கில் இறந்தவர், சாட்சிகள், இறந்தவரின் பெற்றோர்கள் ஆகியோர்களுடைய செல்போன்களை பார்த்தீர்களா அவற்றின் எண்களை தெரிந்துகொண்டீர்களா, அவற்றின் கால் ரெக்கார்டுகளை பெற்றுள்ளீர்களா என்றால் நான் பெறவில்லை. இறந்தவர் பட்டியல் சாதியை சேர்ந்தவர் என்பது உங்கள் புலன் விசாரணையின் போது எப்போது தெரியவந்தது என்றால் விசாரணைக்கு பின்பு 01.10.2020 அன்று தெரிந்துகொண்டேன். அதன்பிறகு தான் இவ்வழக்கின் புலன்விசாரணை காவல் துணை கண்காணிப்பாளருக்கு இந்த வழக்கு கோப்புகள் மாற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.51 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை 19.09.2020 அன்று தயாரித்து நீங்கள் 21.09.2020 அன்று நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் முதல் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை மேற்சொன்ன தேதியை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்போது SC/ST Act சட்டப்பிரிவுகள் அதில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.1 சஷ்மிதாவை நீங்கள் விசாரித்தபோது நாடார் சமூகத்தை சேர்ந்தவர் என்று உங்களுக்கு தெரிய வந்ததா என்றால் என் விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.1 சஷ்மிதா கலப்பு திருமணம் செய்து கொண்டு அவர் கணவர் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்று உங்களது விசாரணையில் தெரிந்துகொண்டீர்களா என்றால் அ.சா.1 சஷ்மிதாவின் வாக்குமூலத்தில் தெரிந்துகொண்டேன். அ.சா.1 சஷ்மிதாவின் வாக்குமூலம் 18.09.2020 அன்றே உங்களிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அப்போது அ.சா.1 சஷ்மிதா பட்டியல் இனத்தை சேர்ந்த இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியை திருமணம் செய்து கொண்டார் என்று தெரியவந்தது. இறந்தவர் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்றும் எதிரிகள் யாரும் பட்டியல் இனத்தை சேராதவர்கள் என்றும் அந்த வழக்கின் புலன் விசாரணையை நீங்கள் செய்ய இயலாது என்று சொன்னால் சரிதான். 01.10.2020 ஆம் தேதி வரை இவ்வழக்கின் புலன் விசாரணையை நீங்கள் தான் மேற்கொண்டீர்கள் என்று சொன்னால் சரிதான். அஜித்குமாரை 23.09.2020 அன்று அவரை விசாரிததுள்ளீர்கள் என்றும் அவருடைய வாக்குமூலத்தை 21.12.2020–ல் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 சஷ்மிதா உங்களுடைய விசாரணையில் ஆஜர் எதிரி பிரேம்குமார் என்பவர் இளநீர் கடைக்கு அருகில் Hero Honda இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தார் என்றும் கோகுல்ராஜ்–ம் துரைப்பாண்டியும் என் கணவரை வெட்டி விட்டு திரும்பி படியில் இறங்கம்போது எதிரி பிரேம்குமார் என்பவர் அவர்கள் இருவரையும் பார்த்து அவனுக்கு இன்னும் உயிர் இருக்கிறது

அவனை இன்னும் வெட்டுங்கடா என்று சொன்னார் என்றும் பின்னர் கோகுலும் துரைப்பாண்டியும் என் கணவரை படியில் இழுத்து போட்டு வெட்டிவிட்டார்கள் என்று அ.சா.1 உங்களிடம் கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 பெரியசாமி, அ.சா.3 பிரவீன் என்ற பன்னீர்செல்வம் ஆகியோர் உங்களுடைய விசாரணையில் ஆஜர் எதிரி பிரேம்குமார் என்பவர் மட்டும் இளநீர் கடைக்கு அருகில் Hero Honda இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தார் என்றும், அவர் மட்டும் இன்னும் சாகவில்லை வெட்டுங்கடா என்று சொன்னார் என்றும் அவ்வாறு சொன்னவுடன் என் தம்பியை மாறி மாறி வெட்டினார்கள் என்றும் சொன்னதாக உங்கள் விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை பிரேம்குமாரும் ஆர்.எஸ் மணிகண்டனும் சேர்ந்து கோகுல் என்ற கோகுலகிருஷ்ணணணிடம் டேய் அவன் இன்னும் சாகவில்லை என்றும் நல்லா வெட்டி சாகடிங்கடா என்று கூறியுள்ளார்கள். அவ்வாறு சொல்லிய பிறகு வெட்டியதாக கூறவில்லை. நீங்கள் சரியான முறையில் புலன்விசாரணை செய்யாமல் சாதிக்கட்சிகளின் தூண்டுதலின் பேரில் இந்த எதிரிகளின் மீது ஒருதலைபட்சமாக சாட்சியம் தயாரித்துக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>**நீதிமன்ற கேள்வி**</u>

சம்பவ இடத்திற்கு மேற்கு திசையில் சேலம் பைபாஸ் ரவுண்டானா உள்ளது. சம்பவ இடத்திற்கும் சேலம் பைபாஸ் ரவுண்டானாவிற்கும் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும்.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.